**Dated : 19.02.2026**

**O.S.No. 311/2022**

**DW.1 – திருமதி. சங்கீதா**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதி கமலநாதனின் மனைவி கவிதா எனக்கு பெரியம்மா பெண் ஆவார். வாதி எனக்கு மாமா உறவுமுறை. நான் தாக்கல் செய்திருக்கின்ற பதிலுரையில் வாதி யார் என்ற விவரமே எனக்கு தெரியாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் சொல்லவில்லை. வாதிக்கு சொந்தமாக கிருஷ்ணகிரியில் வீடு உள்ளது என்றால் சரிதான். கவிதா என்பவர் கடந்த 10 வருட காலங்களாக மகளிர் உதவி குழு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மனோஜ் என்பவர் என்னுடைய சகோதரரா என்றால் இல்லை, என்னுடைய மகன். கமலநாதன் லாரியும், டிராவல்ஸ்ம் வைத்து தொழில் செய்து வந்தார் என்றால் டாடா சுமோ வைத்திருந்த விவரம் பற்றி தெரியும், லாரி வைத்திருந்த விவரம் தெரியாது. கமலநாதனும், கவிதாவும் ஓரளவு வருமானம் ஈட்டிவந்தார்கள் என்றால் தெரியாது. நான் எந்த வருடம் நியாய விலை கடையில் விற்பனையாளராக வேலை பார்த்தேன் என்றால் 2014ல் வேலைக்கு சேர்ந்தேன். எனக்கு அரசு ஆவணங்களில் தமிழிலும், பிற ஆவணங்களில் ஆங்கிலத்திலும் கையொப்பமிடும் வழக்கும் உண்டு என்றால் இல்லை, நான் எல்லா கையெழுத்தும் ஆங்கிலத்தில் தான் போடுவேன்.

2019லிருந்து எனக்கும் வாதிக்கும் பேச்சுவார்த்தை இல்லை. வாதி 15.05.2022 தேதி எனக்கு ஒரு சட்ட அறிவிப்பினை அனுப்பினார் என்றால் அனுப்பினார். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொள்ளாமல் திருப்பிவிட்டேன் என்றால் அப்போது நான் வேலைக்கு போய்விட்டேன், அதனால் அன்றைய தேதியில் எனக்கு தெரியாது, 2 நாட்கள் கழித்து விவரம் தெரியும். அரசு அலுவலர்களுக்கு நான் வேலை பார்க்கும் இடத்திலேயே வந்து தபால்களை கொடுப்பார்கள் என்றால் எனக்கு வரவில்லை. சட்ட அறிவிப்பு வாதி அனுப்பியிருக்கிறார் என்ற விவரம் தெரிந்திருந்தும் நான் தபால் அலவலகத்திற்கு சென்று அந்த தபால்களை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் நான் போய் கேட்டேன், அவர்கள் அனுப்பிவிட்டோம் என்று தெரிவித்தார். தபால்களை நான் திருப்பி அனுப்பிவிட்டேன் என்ற விவரத்தை என்னுடைய எதிருரையில் நான் தெரிவிக்கவில்லை என்றால் என்னை யாரும் கேட்கவில்லை, அதனால் எனக்கு தெரியாது. நான் வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டுவிட்டு, அதை திருப்பி செலுத்தாத காரணத்தினால் எனக்கு அறிவிப்பு வரும் என தெரிந்துக்கொண்டே நான் அந்த அறிவிப்பை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் நான் பணம் எதுவும் வாங்கவில்லை, அதனால் எனக்கு அதுபற்றி தெரியாது.

நான் புரோநோட்டு வழக்கின் மீது கையெழுத்து நிபுணர் மூலமாக அதன் உண்மை தன்மை அறிய மனு ஒன்றினை தாக்கல் செய்து, அந்த மனுவை நான் மேல் நடத்தாததால் அந்த மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. அந்த மனுவினை நான் மேல் நடவடிக்கை செய்திருந்தால் அந்த ஆவணம் எனக்கு எதிராக உறுதி செய்யப்பட்டுவிடும் என்ற காரணத்தினால் தான் நான் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் விட்டுவிட்டேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கவிதாவிற்கும், மனோஜ்க்கும் இடையே ஏதோ பேச்சு வார்த்தை நடந்ததாக நான் சொல்லியிருக்கிறேன், அது சம்மந்தமாக என்னுடைய எதிருரையில் எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்றால் அப்போது கொடுக்கவில்லை. எனக்கு அந்த தகவல் வழக்கு விசாரணையின் போதே தெரியவந்ததா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அவர்கள் 2 பேரும் எப்போது யார் முன்னிலையில் பேசினார்கள் என்ற விவரங்கள் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் தற்போது குறிப்பிட்டுள்ளேன். அதுபோல எந்த விவரமும் குறிப்பிடவில்லை, இந்த வழக்கிற்காக தற்போது கூறுகிறேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த பதிலுரையாகும், அதிலுள்ள கையொப்பதை என்னுடையதல்ல என்று மறுக்கிறேனா என்றால் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான், அதை தற்போது பணம் பெற்றுக்கொள்ளவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் எல்லாம் நான் பணம் பெற்றுக்கொண்ட விவரத்தை பற்றி தெளிவாக சாட்சி கூறியுள்ளார்கள், நான் தற்போது பணம் வாங்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2018 பேரனாம்பட்டு கிராமத்தில் 972 சதுரடி நிலம் கிரயம் பெற்றிருக்கிறேன் என்றால் ஏற்கனவே இடம் வாங்கி வைத்திருந்தோம், அந்த இடத்தை விற்றுவிட்டு தற்போது சொல்லும் நிலத்தை வாங்கினேன். நான் 2019ல் வாதியிடம் கடன் பெற்று தான் வீடு கட்டினேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.